**மாகாண வீதிகள் செயற்திட்டம் - செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவு (பீசீயூ)-2014**

மாகாண வீதிகள் செயற்திட்டம் - செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவின் (பீசீயூ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி முகவருக்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 சனவரி 11 ஆம் திகதிய 4630 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.09 (பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும். இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின்படி, முன்னைய உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சான தற்போதைய மாகாண சபைகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்று முகவராகவும், ஊவா, கிழக்கு மற்றும் வடக்கு மாகாண சபைகள் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகவும் உள்ளன. செயற்திட்டத்தின் நோக்கமாவது, அபிவிருத்தி அடைந்த வீதி உட்கட்டமைப்பின் நிலைபேறான முகாமைத்துவத்தினூடாக கடன் பெறுநரின் ஊவா, கிழக்கு மற்றும் வட மாகாணங்களிலுள்ள சமூக – பொருளாதார நிலையங்களிற்கான நடைமுறைமை முன்னேற்றுவதாகும். செயற்திட்ட நிதி மதிப்பீட்டு ஆவணத்தின்படி செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவிற்கான செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 475 மில்லியனிற்குச் சமனான ஐக்கிய அமெரிக்க டொலர் 3.8 மில்லியன் ஆனதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை 2010

மார்ச் 31 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமெனப் பட்டியலப்படுத்தப்பட்டது.

### 1.3 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

என்னுடைய கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். எனது கணக்காய்வினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நான் மேற்கொண்டேன். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வையினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில்

விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாகக் காணப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கைக் கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்ககான சான்றுகளின் பரிசோதனை, பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளினையும் குறிப்பிடத்தக்க மதிப்பீடுகளினையும் மதிப்பாய்வு செய்தல், நிதிக்கூற்றுக்களினைத் தயாரிக்கையில் செய்த தீர்ப்புக்கள், அதன் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் என்பவற்றை அப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கங்களிற்கு அவசியமானதென எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்கும் தென்பட்ட போதிய தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென்றும் நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டுப் பதிவேடுகள் என்பவற்றின் அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவீனங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இனங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழான பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க, செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கிணங்க நிதிக்

கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்
------------------------

### 2.1 அபிப்பிராயம்
------------------------

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்க

(அ) செயற்திட்டம் 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகளிற்கிணங்க மீளளிப்பு விண்ணப்பங்களின் ஆதாரமானவையாக நியாயபூர்வமாக நம்பிக்கைகொள்ளமுடியுமென்றும்

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(உ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிப் பிரமாணம் 371(அ) வின் படி அலுவலர்களால் பெறப்பட்ட முற்பணங்கள் குறித்த நோக்கங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். எனினும் 03 அலுவலர்களால் 12 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 521,800 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்கள் 25 நாட்கள் தொடக்கம் 275 நாட்கள் வரை வீச்செல்லையான தாமத்துடன் தீர்க்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2010 ஒக்தோபர் 10 ஆம் திகதிய எம்ஓஎவ்பீ01/2010/01 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில், ஒரு நாளுக்கு ஐ.அ.டொலர் 30 ஆன படி என்று குறித்துரைக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 04 சந்தர்ப்பங்களில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களிற்காக வெளிநாடுகளுக்கு சென்ற 09 உத்தியோகத்தர்கள் ஒவ்வொருக்கும் ஒரு நாளுக்கு ஐ.அ.டொலர் 50 தொகையான இடை நேர் செலவுகளிற்கான படிகள் செலுத்தப்பட்டிருந்தன. எனவே சுற்றுநிருப அறிவுறுத்தல்களிற்கு முரணாக ரூபா 140,476 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2007 ஏப்ரல் 05 ஆம் திகதிய 33 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 8.1 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்திட்டத்தின் சேவைக்காலப்பகுதியில் ஒரு குறுகிய காலப்பயிற்சிக்கு மாத்திரம் வெளிநாட்டிற்குச் செல்ல செயற்திட்டத்தின் உத்தியோகத்தர்கள் அனுமதிக்கப்படுவர். எனினும், செயற்திட்டத்தின் 10 உத்தியோகத்தர் பல்வேறு காலங்களில் வெளிநாட்டுப் பயிற்சியில் பங்குபற்றியிருந்ததுடன் அவர்களுடைய சேவைக்காலத்தின் போது அவற்றுக்காக ரூபா 14,957,017 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) நிதி, திட்டமிடல் அமைச்சின் 2012 யூலை 09 ஆம் திகதிய சீஏ/பீ/பீ/ஏ/1/1/16/1 ஆம் இலக்க சுற்றுநிருபத்தினால் வேண்டப்பட்டவாறு வெளிநாட்டுப் பிரயாணத்தின் பின்னர் தீவுக்கு திரும்பி வந்து 7 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள். செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து செயற்திட்டத்தினால் வழங்கப்பட்ட ரூபா 22,752,896 தொகையால் பயன்படுத்தி வெளி நாடுகளிற்கு சென்ற 37 உத்தியோகத்தர்களால் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிக்க உடன்பட்ட தொகை | | 2014 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் ஒதுக்கப்பட்ட தொகை | பயன்படுத்தப்பட்ட நிதிகள் 2014 ஆம் ஆண்டு | | பயன்படுத்தப்பட்ட நிதிகள் 2014 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.டொலர் மில்லியன | ரூபா மில்லியன் | ஐ.டொலர் மில்லியன | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 3.8 | 475 | 80 | 0.54 | 71.1 | 2.4 | 300.9 |
| மொத்தம் | 3.8 | 475 | 80 | 0.54 | 71.1 | 2.4 | 300.9 |

### 3.2 பௌதீக செயலாற்றல்

கடன் கொடுக்கும் முகவர் மற்றும் செயற்திட்டத்தின் ஏனைய ஆக்கக்கூறுகளின் அமுலாக்கத்தில் ஈடுபட்டுள்ள ஏனைய 3 மாகாணங்களின் உத்தியோகத்தர்களிற்கிடையிலான ஒருங்கிணைப்பிற்கு செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவு பொறுப்பாக உள்ளது. அதற்கு மேலதிகமாக ஆலோசனை மற்றும் தொழில்நுட்ப உதவிகள் வழங்கல் மற்றும் நிலையான சொத்துக்களின் முக்கியமான உருப்படிகளின் கொள்வனவு போன்ற நடவடிக்கைகள் செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றது. எனினும், மீளாய்வாண்டிற்கான செயற்திட்ட ஒருங்கிணைப்பு பிரிவிற்கான நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

ரூபா 6,729,184 ஆன குறைந்த கேள்வியை நிராகரிப்பதற்கான ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களில்லாமல் அஸ்பால்ற் பரீட்ச்சிக்கும் உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்காக கிடைத்த கேள்விகளில் ரூபா 8,625,432 ஆன இரண்டாவது குறைந்த கேள்வி தெரிவு செய்யப்பட்டதென்று அவதானிக்கப்பட்டது. மேலும், மண் பரிசோதனை செய்யும் உபகரணத்தை கொள்வனவு செய்வதற்காக ரூபா 12,266,257 ஆன இரண்டாவது குறைந்த விலையை நிராகரிப்பதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய போதியளவான காரணங்களில்லாது ரூபா 12,392,800 தொகையுடைய மூன்றாவது குறைந்த கேள்வியின் அடிப்படையில் அதே வழங்குனர் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

**3.4 குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

ஹு஌ளந்தாவக இடது கஹம்பன வீதியின் புனரமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தகாரரின் ஊடாக செயற்திட்டத்தால் 2014 சனவரியிலிருந்து ரூபா 140,400 மாத வாடகையில் ஒரு சுற்றுலா விடுதியொன்று வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட வசதிகள் பதுளை பிரதேசத்திற்கு சுற்றுலா செனற் உத்தியோகத்தர்களால் பயன்படுத்தப்படாததுடன் ஏனைய இடங்களில் தங்குமிட வசதிக்காக கோரிக்கை செய்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.5. விதிவிலக்கான செயற்பாடுகள்**

செயற்திட்டத்தின் நோக்கங்களை எய்துவதுடன் நேரடியாக தொடர்பற்ற ஒரு காணொளியினை தயாரித்தல் மற்றும் தேசத்திற்கு மகுடம் கண்காட்சி என்பன தொடர்பில் முறையே ரூபா 300,000 மற்றும் ரூபா 267,233 தொகைகள் மீளாய்வாண்டில் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.